

# இடம் பொருள் கலைஞர்

105

**மகிழவன்**

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து, இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (TNHDC)





# கைவினைக் கலைஞர்களின் கலங்கரை விளக்கம்!

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (TNHDC)

தமிழ்நாட்டின் கலைத்திறனும் கைவினைத் திறனும் உலக அளவில் பெயர் பெற்றவை. தமிழ்நாட்டுக் கலைஞர்கள் கொண்டாடப் படும் அதேவேளையில், கைவினைத் திறனை ஊக்குவிக்கவும், அதற்கு வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கவும், 1973-ஆம் ஆண்டு கலைஞர் உருவாக்கிய நிறுவனம்தான் **'தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்'**. எளிதாக அறிந்து கொள்ள வேண்டும் என்றால், இந்தக் கழகத்தின் வணிகப் பெயரை **'பூம்புகார்'** எனச் சொன்னால் போதும். கலைப் பண்பாட்டுடன் பிரிக்கமுடியாத ஓர் ஊர்ப் பெயரை கலைத்துறை சார்ந்த நிறுவனத்தின் வணிகப் பெயராக்கி, அனைவரிடமும் எளிதாகக் கொண்டு சேர்த்தார் கலைஞர்.

கைவினைஞர்களின் நலனை உறுதி செய்யவும், கைத்திறன் தொழிலை மேம்படுத்தி முன்னேற்றும் நோக்கிலும் இந்தக் கழகத்தை உருவாக்கியதுடன், அதற்கான விற்பனையகத்தையும் உருவாக்கினார், முத்தமிழறிஞர் கலைஞர். குறிப்பாக, தமிழ்நாட்டு கைவினைஞர்களின் கடுமையான உழைப்பினால் உருவாகும் உலோகச் சிற்பங்கள், சுடுமண் மற்றும் மரம், கற்சிற்பங்கள், கலைத்தட்டுகள், தஞ்சாவூர் ஓவியங்கள், காகிதக்கூழ் கைவினைப் பொருட்கள் ஆகியவற்றை உலகம் முழுவதும் கொண்டு சேர்ப்பதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.

### விற்பனையகங்கள்

கைவினைக் கலைஞர்களால் தயாரிக்கப்படும் பல்வேறு வகையான கைத்திறப் பொருட்கள் பூம்புகார் விற்பனையகங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சென்னை, கல்கத்தா, புதுடெல்லி என முக்கிய நகரங்களில் 17 விற்பனை நிலையங்கள் உள்ளன. முக்கிய நாட்களையொட்டி உள்ளூர், வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் நடத்தப்படும் பல்வேறு கண்காட்சிகளின் மூலமாகவும், இந்நிறுவனம் கைவினைத் தயாரிப்புகளை விற்பனை செய்து வருகிறது. பூம்புகார் நிறுவனத்தின் WWW.POOMPUHAR.COM என்ற இணையதளம் மூலமும் விற்பனை நடைபெறுகிறது. கைபேசி செயலிகள் மூலம் விற்பனை செய்யும் விதமாக **'பூம்புகார்'** நிறுவனத்துக்கு என 'உயர்திறன் செயலி' பயன்பாட்டினையும் (HYBRID APP) இந்த நிறுவனம் தொடங்கியுள்ளது.

### மூலப்பொருள் வங்கி

தஞ்சாவூர் மாவட்டத்தில், நாச்சியார்கோவில் மற்றும் சுவாமிமலையில் பித்தளை குத்துவிளக்கு மற்றும் பஞ்சலோகச் சிலை தயாரிக்கும் கைவினைத் தொழில் புகழ்பெற்றது. அங்குள்ள கைவினைக் கலைஞர்களுக்குத் தேவைப்படும் மூலப்பொருட்களான வெண்கலம், பித்தளை, செம்பு, துத்தநாகம் போன்றவற்றைத் தரமானதாகவும் நியாயமான விலையிலும் தங்கு தடையின்றி வழங்கும் நோக்கத்துடன் ஒன்றிய அரசின் ரூ.2 கோடி நிதியுதவியுடன் 2010-ஆம் ஆண்டு சுவாமிமலையில், **மூலப்பொருள் வங்கி** ஒன்றும் செயல்படுத்தபடுகிறது.

இந்த மூலப் பொருள் வங்கியின் மூலம் நாச்சியார்கோவில் மற்றும் சுவாமிமலையில் உள்ள ஏறத்தாழ 300 கைவினைஞர்கள் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞரும் தமிழ்நாடு அரசின் சார்பில், ரூ.10 இலட்சம் மானியம் வழங்கினார்.

### வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், உலோகச் சிற்பங்கள் உள்ளிட்ட கைவினைப் பொருள்களைத் தயாரிக்கும் உற்பத்தி நிலையங்கள் நாச்சியார்கோவில், மதுரை வாகைக்குளம், சுவாமிமலை, தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த உற்பத்தி நிலையங்கள் மூலமாகவும் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன.

கைத்திறப் பொருட்கள் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் விதமாக, குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பயிற்சிகளை நடத்தி வருகிறது. பயிற்சிக் காலங்களில் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகையையும் இந்நிறுவனம் வழங்கி வருகிறது. குறிப்பாக, கைவினைஞர்களுக்கு உதவும் விதமாக 3D வடிவமைப்பு மற்றும் அச்சுத் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையத்தினையும் செயல்படுத்தி வருகிறது.

**இந்த நிறுவனம் மூலம் தமிழ்நாட்டின் கைவினைக் கலைகள் புத்துயிர் பெற்றதுடன், கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரமும் மேம்பட்டு வருகிறது.**

### கைவினைச் சுற்றுலா கிராமம்

ஒன்றிய அரசின் பங்களிப்புடன் சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் **'கைவினைச் சுற்றுலா கிராமம்'** என்ற ஒரு திட்டம், ரூ.5.61 கோடி செலவில், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்மூலம், மாமல்லபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள தொன்மையான மற்றும் நலிந்த கைவினைஞர்களின் குடியிருப்புகளைச் சீர்செய்து, மேம்படுத்தி, தேவைக்கேற்ப அழகுபடுத்தி, அவர்கள் வசிக்கும் இடங்களை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலும், அவர்களிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் இதன்மூலம் வழி ஏற்பட்டுள்ளது.

### புவிசார் குறியீடு

இக்கழகத்தின் முன்னெடுப்பில் ஏற்கெனவே நாச்சியார் கோயில் பித்தளை விளக்குகள், பத்தமடை பாய்கள், தோடா சித்திரத் தையல் (நீலகிரி), மாமல்லபுரம் கற்சிற்பங்கள், சுவாமிமலை பஞ்சலோகச் சிலைகள், வடசேரி கோயில் நகைகள், தஞ்சாவூர் கலைத்தட்டுகள், தஞ்சாவூர் ஓவியங்கள், தஞ்சாவூர் பொம்மைகள், கள்ளக்குறிச்சி மரச்சிற்பங்கள், கருப்பூர் கலம்காரி ஓவியம், அரும்பாவூர் மரச் சிற்பம், மயிலாடிக் கற்சிற்பங்கள் ஆகியவற்றுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது.

கடலூர் (வண்டிப்பாளையம்) களிமண் பொம்மைகள், இராணிப்பேட்டை (வாலாஜாபேட்டை) மூங்கில் மற்றும் பிரம்பு கைவினைப் பொருட்கள், சென்னை (கொசப்பேட்டை) - களிமண் பொம்மைகள், காஞ்சிபுரம் - காகிதக்கூழ் களிமண் பொம்மைகள், மதுரை (கே.புதூர்) - உலோக கைவினைப் பொருட்கள். தென்காசி (காருகுறிச்சி) -களிமண் பொம்மைகள், திருவள்ளூர் (பழவேற்காடு) பனை ஒலை கைவினைப் பொருட்கள், தென்காசி (அம்பாசமுத்திரம்) - மரவர்ணக் கடைசல் பொம்மைகள், திருவண்ணாமலை (முடையூர்) - நுண்ணிய கற்சிற்ப கைவினைப்பொருட்கள், ஈரோடு (ஆசனூர்) - ஒன்னிக்குச்சி கைவினைப்பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதற்காக ரூ.15 லட்சத்தையும் தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

### கைவினைஞர்களுக்கு விருதுகள்

கைத்திறன் மேம்பாட்டுக்காக பங்களிப்பு செய்த 65 வயதுக்கு மேற்பட்ட திறன்மிகு கைவினைஞர்களுக்கு 'வாழும் கைவினைப் பொக்கிஷம்' விருது, தமிழ்நாடு கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது, பெண் கைவினைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், அவர்களுடைய சுயசார்பினை உறுதிப்படுத்தும் வகையிலும், பூம்புகார் மாவட்டக் கைத்திறன் விருதுகளும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

### அரசின் சாதனை

இந்த நிறுவனம் மூலம் தமிழ்நாட்டின் கைவினைக் கலைகள் புத்துயிர் பெற்றதுடன், கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரமும் மேம்பட்டு வருகிறது. கலைஞரின் கைவண்ணமே கைவினைகளின் மேம்பாடு என்பதை காலம் உணர்வதற்கு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் சான்று.

**...வலம் வருவோம்**




## கலைஞர் கருவூலம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகள் அனைத்தையும், தமிழ்நாடு அரசு நாட்டுடைமையாக்கியுள்ள நிலையில், அவற்றை மின்னுருவாக்கம் செய்து 'கலைஞர் கருவூலம்' என்ற இணையப் பக்கத்தை உருவாக்கியிருக்கிறது, தமிழ் இணையக் கல்விக்கழகம்.

நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள், கவிதைகள், கட்டுரைகள், தன் வரலாறு, இலக்கிய உரை என அனைத்து இலக்கியப் படைப்புகளும், அவர் நடத்திய இதழ்கள், ஆண்டு மலர்கள், கடிதங்கள், கேலிச் சித்திரங்கள் என இதழியல் படைப்புகளும், அவருடைய சட்டமன்ற உரைகள், சொற்பொழிவுகள் மற்றும் நேர்காணல்களும் இந்தப் பக்கத்தில் ஆண்டுவாரியாகப் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அதேபோல கலைஞரின் உரைகள், திரைக்கதை & வசனம், பாடல்கள் எனத் திரைத்துறைப் பணிகள் உள்ளிட்ட கலைஞரின் படைப்புகள் அனைத்தும் மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி, கலைஞரின் புகைப்படங்கள், காணொளிகள், கலைஞர் குறித்து பிறர் எழுதிய நூல்கள், கட்டுரைகள் அனைத்தும் இத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. இனி, உலகின் எந்த மூலையில் இருந்தும் கலைஞர் குறித்து எழுதவோ, பேசவோ தரவுகளுக்காகத் தேடி அலைய வேண்டியதில்லை என்ற வசதியை, வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது, இந்த இணையதளப் பக்கம்.

'செங்கோலை விட எழுதுகோலே வலிமையானது' என்ற எண்ணம் கொண்டிருந்த கலைஞரின் படைப்புகளைக் காலத்தை வெல்லச்செய்து, இன்றைய தலைமுறையினரும் அறிந்துகொள்ள, ஆய்வுசெய்ய வழிகோலும் இம்முயற்சி பாராட்டத்தக்கது.

இணையப்பக்க முகவரி: https://tamildigitallibrary.in/kalaignar/index.html

## ஃப்ளாஷ்பேக்



### தளபதி பிறந்தநாளில் வாழ்த்து!



மு.பாஸ்கர்

1996-ஆம் ஆண்டு மார்ச் 1-இல் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் கூட்டம், தியாகராயர் நகர், முருகன் திருமண மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது, நான் நேரில் சென்று, அவருக்குப் பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்து, புகைப்படம் ஒன்றையும் எடுத்துக்கொண்டேன்.

**- மு.பாஸ்கர், வட்டத் துணைச் செயலாளர், அம்பத்தூர், சென்னை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### வரவேற்பும் உலக வரலாறும்!

1962-ஆம் ஆண்டு விலைவாசி உயர்வு போராட்டத்தில் பேரறிஞர் அண்ணா கைது செய்யப்பட்டு விடுதலையானபோது, வேலூரில் இருந்து சென்னை வரை பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்த வரவேற்பு குறித்து எழுதிய 'சுதேசமித்திரன்' இதழ், ஜூலியஸ் சீசர், ரோம் நகரம் வந்தபோது, அவருக்குத் தரப்பட்ட வரவேற்பினையும், ஐரோப்பாவை வெற்றி கண்ட நெப்போலியன் பாரீஸ் நகரம் திரும்பியபோது தரப்பட்ட வரவேற்பினையும் ஒப்பிட்டு எழுதியது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

741

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131